# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 12 வியாழக்கிழமை 26.06.2025 கதிர் 236



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel




# எம்.பி. பதவியை இழப்பாரா அர்ச்சுனா? ஜூலை 2 இற்கு வழக்கு ஒத்திவைப்பு!



கொழும்பு, ஜூன் 26

யாழ்ப்பாணம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் பதவி தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்னமும் அரச வைத்திய சேவையில் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட அதிகாரியாகத் தொடரும் வைத்தியர் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போதே, வழக்கை ஜூலை 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கெஹலியவின் குடும்பத்தினருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல்



கொழும்பு, ஜூன் 26

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகனுக்கு எதிராக ➤ 7

## சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்த உதவுங்கள்!

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஐ.நா. ஆணையரிடம் வேண்டுகோள்




யாழ்ப்பாணம், ஜூன் 26

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று ஐ.நாவின் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ➤ 7

## சந்தேகத்துக்கிடமான முறையில் பூஸா சிறைச்சாலை கைதி சாவு!



### பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூன் 26

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் ➤ 7

## கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியது தமிழரசு



### தவிசாளராக சின்னராசா லோகேஸ்வரன் தெரிவு

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

அந்தப்பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சின்னராசா ➤ 7

## சங்கானையில் போதைக்கு எதிராகப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 26

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இன்று சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனையானது அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் அதன் தாக்கம் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தவர்கள் என சிறியோர் முதல் பெரியோர்வரை அனைவரிடத்திலும் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் குடும்பங்களிடையே பல்வேறு விதமான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கும் போதைப்பொருள் பாவனையில் இருந்து அனைவரையும் மீட்கும் நோக்குடனும் இந்த விழிப்புணர்வுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "போதை அற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி, எம் சமூகத்தை அழிக்கும் ➤ 7

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# பொலனறுவையில் அரச பேருந்து மற்றும் தனியார் பேருந்து ஊழியர்களிடையே மோதல்- 5 பேர் காயம்!

கொழும்பு, ஜூன் 26

பொலனறுவையில் அரச பேருந்து மற்றும் தனியார் பேருந்து ஊழியர்களிடையே ஏற்பட்ட மோதலினால் 5 பேர் காயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறையிலிருந்து பொலன்னறுவை டிப்போவிற்கு வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச்சொந்தமான பேருந்து, தனியார் வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவர்களையும், வழியில் பருவச் சீட்டுகளைப் பெற்றவர்களையும்ஏற்றிக்கொண்டு சென்றதால், தனியார் பேருந்துகளில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்ததன் காரணமாக இந்த மோதல் ஏற்பட்டதாகதெரிவிக்கப்படுகிறது.


மாத்தறையிலிருந்து வந்த அரச பேருந்தில் டிப்போ முகாமையாளர்இருந்துள்ளதுடன், பொலன்னறுவை டிப்போவிற்கு முன்னால்பேருந்துகடக்கும்போது தனியார் பேருந்து சாரதி டிப்போ முகாமையாளரைத்தாக்கியதால் மோதல் அதிகரித்தது.

பின்னர் டிப்போவில் இருந்த அதிகாரிகள்குழுதனியார்பேருந்து சாரதி மற்றும் நடத்துனரை தாக்கியுள்ளனர்.

இந்த மோதலில் இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போ முகாமையாளர் உட்பட மூன்று ஊழியர்களும், தனியார் பேருந்து ஊழியர்கள் இருவரும் காயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பொலன்னறுவை மாவட்டத்திலும், நீண்டதூர பயணங்களுக்காகவும் சுமார் 135 இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாகவும்,மேற்படி தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (26) பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகவும் டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது பொலன்னறுவை டிப்போவில் பல பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், பிரதான வாயில்மூடப்பட்டுள்ளது, இதனால் ஊழியர்கள், பேருந்துகள் மற்றும் சொத்துக்களின்பாதுகாப்புபொலிஸாரினால்உறுதிசெய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வா வின் அறிவுறுத்தலின் பேரில் பொலன்னறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரயில்வே தொழில்நுட்ப வல்லுநர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 26

மேலதிக நேரப் பிரச்சினையை முன்வைத்து, ரயில்வே தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ரயில்வே தொழில்நுட்ப உதவியாளர்கள் இன்று (26) காலை முதல் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி, இன்று காலை 7 மணி முதல் 24 மணிநேர அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை பொதுஜன ரயில்வே ஊழியர் சங்கத்தின் செயலாளர் நதீர மனோஜ் தெரிவித்தார்.

தங்கள் பிரச்சினை குறித்து அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்த தீர்வும் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# வார இறுதியில் நடந்த கடுகதி ரயில் சேவை இனி ஜூலை 7ஆம் திகதி தொடக்கம் தினசரி

## யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலைய அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

இதுவரை காலமும் வார இறுதி நாட்களில் சேவையை முன்னெடுத்து வரும் குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் தினசரி சேவையாக கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரை முன்னெடுக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலைய அத்தியட்சகர் ரீ.பிரதீபன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கையில்,

“பொதுமக்கள் ரயில்வேத் திணைக்களம் மற்றும் துறைசார் தரப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தச்சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இந்த ரயில் தனது சேவையை முன்னெடுத்துவந்தது.

இந்நிலையில் எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் கல்கிசை ரயில் நிலையத்தில் இருந்து காலை 5.15 மணிக்கு தனது சேவையை முன்னெடுப்பதுடன் கொழும்பு கோட்டையில் இருந்து காலை 5.45 மணிக்கு யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிக்கும்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை முற்பகல் 1.49 இற்கு அது வந்தடையும். அதன்பின்னர் காங்கேசன்துறையை நண்பகல் 12.13 இற்குச் சென்றடையும்.

மீண்டும்பிற்பகல்1.30 இற்கு காங்கேசன்துறையில் இருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கும் அந்த ரயில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 2.12 இற்குப் புறப்பட்டு கொழும்பு கோட்டையை முன்னிரவு இரவு 8.33 சென்றடையும்.

அதேவேளை, கல்கிசையை முன்னிரவு இரவு 8.55 இற்குச் சென்றடையும்.

இந்த ஒழுங்கில் இந்தச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேநேரம் இந்தக் கடுகதி ரயில் சேவைக்கான ஆசன முற்பதிவுகள் அடுத்த ஒருசில தினங்களில் மேற்கொள்ள முடியும். அதனை ரயில்வே திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையத்திலும் முன்னெடுக்க முடியும்.

இதேவேளை, இதுவரை காலமும் காலை 5.45 மணிக்குக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்ட யாழ். தேவி ரயில் எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் காலை 6.35 மணிக்குத் தனது சேவையை ஆரம்பிக்கும்.” - என்றார்.



# அமைச்சர் விஜித மற்றும் ஈரான் தூதுவர் இடையே கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 26

இலங்கைக்கான ஈரானிய தூதுவருக்கும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் இடையில்கலந்துரையாடல்ஒன்று இடம்பெற்றுள்ளது.

வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தனது ஓ கணக்கில் ஒரு பதிவை வெளியிட்டு, இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர்நிறுத்தம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகளின் முக்கியத்துவம் குறித்து ஈரானிய தூதுவரிடம் வலியுறுத்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மோதல்கள் மேலும் அதிகரிப்பதால் பிராந்தியத்திலும் இலங்கையிலும் ஏற்படும் தாக்கம் மற்றும் ஈரானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் விஜித ஹேரத் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான பேச்சுவார்த்தை அடுத்த வாரம் நடைபெறும்என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலுக்கு பிறகு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகலாம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டார்.. (ஐ)



# பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் மற்றும் நியமனங்கள்

கொழும்பு, ஜூன் 26

பொலிஸ் உயர் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் மற்றும் நியமனங்கள்

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் 9 பேர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 16 பேர் உள்ளடங்களாக 32 பொலிஸ் அதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின்அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றி வந்த நிஹால் தல்துவ, மொனராகலை மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது ஊழியர் சபையின் பிரதி பொலிஸ்மா அதிபராக பணியாற்றிவரும்ஜே.ஆர். டயஸ், அந்தப் பதவிக்கு மேலதிகமாக மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு மேலதிகமாக, இரண்டு பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் ஐந்து உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)




# கதிர்பாக எசல பெரஹெரவில் 1,050 பொலிஸார் பாதுகாப்பு கடமையில்



கொழும்பு, ஜூன் 26

வரலாற்று சிறப்புமிக்க ருஹூணு மகா கதிர்காம தேவாயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும்எசலபெரஹெரவின் போது பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்காக மொத்தம் 1,050 பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஷாந்த டி சொய்சாவின் நேரடி மேற்பார்வையின்கீழ்ஐந்துஉதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் மூன்று பொலிஸ் பொறுப்பதிகாரிகளும்இதற்காகப் பணியமர்த்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பானமபொலிஸ்பிரிவிலிருந்து யால சரணாலயம் வழியாக பெரஹெர நிகழ்வுக்கு கால்நடையாகவரும்பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக முப்படை அதிகாரிகளின் உதவியைப்பெறவும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ருஹூணு மகா கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹெர நிகழ்வு நாளை (26) முதல் ஜூலை 10 வரை நடைபெறும். (ஐ)

# கர்நாடகா அணைகளில் இருந்து 65,000 கனஅடி நீர் திறப்பு ஒகேனக்கல்லில் நீர் வரத்து அதிகரிப்பு



கனமழை காரணமாக கர்நாடகா அணைகளில் இருந்து வினாடிக்கு 65 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், ஒகேனக்கல் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் கனமழைபெய்துவருகிறது. இதன்காரணமாக கர்நாடகா அணைகளான கபினி மற்றும் கே.ஆர்.எஸ்., எனப்படும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கான நீர்வரத்து மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி கே.ஆர்.எஸ்., அணையின் நீர்மட்டம் 120.90 அடியாக உள்ளது. நீர் இருப்பு 44.194 டி.எம்.சி.,யாக உள்ளது. அணைக்கான நீர்வரத்து 33,000 கனஅடியாக உள்ளது.

கபினி மற்றும் கே ஆர் எஸ் அணைகளில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 65 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து 35 ஆயிரம் கனஅடி நீரும், கபினி அணையில் இருந்து 30 ஆயிரம் கனஅடி நீரும் காவிரியில் திறந்து விடப்படுகிறது.

இதனால், ஒகேனக்கல்லுக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. 24,000 கனஅடியாக இருந்த நிர்வரத்து 32,000 கனஅடியாக உயர்ந்துள்ளது. எனவே, சுற்றுலாப் பணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் 2வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டமும் உயர்கிறது. இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணை நீர்மட்டம் 112 அடியாக உள்ளது. நீர் இருப்பு 82.34 டி.எம்.சி.,யாக உள்ளது. அணைக்கான நீர்வரத்து 18,290 கனஅடியாக இருக்கிறது. நீர்வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் அணை விரைவில் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## பல்கலை நிகழ்ச்சியில் மயங்கி விழுந்த தன்கர்



உத்தராகண்டில் பல்கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் மூன்று நாள் பயணமாக உத்தராகண்ட் மாநிலம் நைனிடாலுக்கு சென்றுள்ளார். நேற்று அங்குள்ள குமாவோன் பல்கலையில் நடந்த பொன்விழா ஆண்டு கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அங்கு, மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய துணை ஜனாதிபதி மேடையில் இருந்து கீழே இறங்கினார்.

அப்போது பார்வையாளர்கள் வரிசையில் முன்னாள் எம்.பி., மகேந்திர சிங் பால் அமர்ந்திருந்ததை கண்டார். இவரும், தன்கரும் நெருங்கிய நண்பர்கள் ஒரே நேரத்தில் எம்.பி.,யாக இருந்தவர்கள்.

நீண்ட நாட்களுக்கு பின் நண்பரை கண்டதால் தன்கர் உணர்ச்சிவயப்பட்டார். மகேந்திர சிங்கை கட்டியணைத்தார். அப்போது, அவரது தோளிலேயே மயங்கி சரிந்தார்.

இதையடுத்து, அங்கிருந்த மருத்துவக் குழுவினர் துணை ஜனாதிபதிக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். இதையடுத்து, அவர் மயக்கம் தெளிந்து இயல்பு நிலைக்கு திரும்பியதும் ராஜ் பவனுக்கு சென்றார். (ஐ)

## போதைப்பொருள் கடத்தல் வழித்தடமாக மாறியுள்ளது திரிபுரா: முதல்வர் வேதனை

எல்லையை ஒட்டியுள்ள மாநிலம் என்பதால், போதைப்பொருள் கும்பல்கள் திரிபுராவை சட்டவிரோத கடத்தலுக்கான வழித்தடமாகப் பயன்படுத்துவதாக அம்மாநில முதல்வர் மாணிக் சாஹா குற்றஞ்சாட்டிஉள்ளார்.

இதன் ஒருபகுதியாக, போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலை தடுப்பது குறித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் திரிபுரா முதல்வர் மாணிக் சாஹா உரையாற்றினார்.

திரிபுரா மூன்று பக்கங்களிலும் வங்கதேசத்தால் சூழப்பட்டுள்ளது. அசாம் மற்றும் மிசோரமுடனும் எல்லைகளை பகிர்ந்து கொள்கிறது.

மாநிலத்தின் புவியியல் அமைப்பு காரணமாக, போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள், திரிபுராவை சட்டவிரோத கடத்தலுக்கான வழித்தடமாகப் பயன்படுத்துகின்றன.

மாநிலத்தில் இளைஞர்களும், இளம்பெண்களும் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி வருகின்றனர். போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்க மாநிலத்தின் எட்டு மாவட்டங்களிலும் போதைப்பொருள் ஒழிப்பு மையங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.



கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, போதைப்பொருள் மற்றும் பிற கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்வது சுமார் 103 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே காலகட்டத்தில் அத்தகைய பொருட்களை அழிப்பதும் 132 சதவீதம் அதிகரித்துள்ளது. நிலைமையைக் கட்டுப்படுத்த அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

## உத்தரகண்டில் 18 பேருடன் சென்ற சுற்றுலா வாகனம் ஆற்றில் கவிழ்ந்தது ஒருவர் உயிரிழப்பு தேடும் பணி தீவிரம்

உத்தரகண்ட் மாநிலத்தில் சுற்றுலா வாகனம் ஆற்றில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், ஒருவர் உயிரிழந்தார். மேலும், 7 பேர் படுகாயம் அடைந்தனர். ஆற்றில் தேடும் பணி நடக்கிறது.

உத்தரகண்ட் மாநிலம், ருத்ரபிரயாக் மாவட்டம் கோல்திர் பகுதியில் 18 பேருடன் சென்று கொண்டிருந்த பஸ் அலக்நந்தா ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு மீட்பு படையினர் விரைந்தனர். மீட்பு பணிகள் நடந்து வருகிறது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், 7 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மற்றவர்களை தேடும் பணி நடக்கிறது.

இது குறித்து உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி கூறியதாவது: ருத்ரபிரயாக் மாவட்டத்தில் ஒரு டெம்போ டிராவலர் ஆற்றில் விழுந்த செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது.

நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மீட்பு படையினரால் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக உள்ளூர் நிர்வாகத்துடன் நான் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## பெங்களூரு நீர் பாதுகாப்பு திட்டங்களுக்காக ரூ.3,662 கோடி வழங்க உலக வங்கி ஒப்புதல்

கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் நீர் பாதுகாப்பு திட்டங்களை மேற்கொள்வதற்காக ரூ.3,662 கோடி ஒதுக்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

தொழில் நகரமாக அறியப்படும் பெங்களூருவில் தண்ணீர் பிரச்னை தீர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. இதனை தடுக்க கர்நாடகா அரசும் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டும் வருகிறது.

இது குறித்து அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கர்நாடகா நீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 183 ஏரிகளை தூர்வாருவதன் மூலம், பெங்களூருவில் வெள்ள பாதிப்பை தடுக்க முடியும். கர்நாடகா பேரிடர் மேலாண்மை மையத்தை நவீனப்படுத்துவதன் மூலம், வானிலை நிலவரத்தை துல்லியமாக கணிப்பதுடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

இந்த நிதியைப் பயன்படுத்தி ஒரு லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்படும். மேலும், 9 கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் கட்டப்பட்டு, ஏரிகள் மற்றும் வடிகால்களில் கழிவுநீர் கலப்பதை தடுக்க முடியும். அதுமட்டுமில்லாமல், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளின் பயன்பாடு மற்றும் பெங்களூர் பகுதியில் நிலத்தடி நீரை உயர்த்த பயன்படுத்தப்படும்.

ரூ.3,662 கோடி கடனை திருப்பி செலுத்த 20 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 5 ஆண்டுகள் கூடுதல் அவகாச காலமாகும், என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# ஆதலினால் காதல் செய்வோம்!

காதல் என்கிற சொல்லை உச்சரிக்கும் போதே பதின் பருவத்தினருக்கு மட்டுமல்ல சில முதிர் பருவத்தினருக்குக்கூட மனம் இனிக்கும்.. ஆமாம், இந்தக் காதல் என்றால் என்ன? இரண்டு உயிர்களுக்கிடையே ஏற்படும் ஓர் ஈர்ப்பு, இனம் தெரியாத அன்பு, தன்னலமற்ற அக்கறை, சேர்ந்து வாழ வேண்டும் என்கிற உணர்வு இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதே இந்த மூன்றெழுத்து மந்திரச் சொல். காதல் என்கிற சொல் பிற்காலத்தில் தோன்றிய ஒன்று. காமம் என்றே முன்னோர் காதலைச் சுட்டினர். காதலுக்குரிய கடவுள் காமன் என்று அழைக்கப்பட்டான். அவனுடைய கோயில் காமக்கோட்டம் என்று அழைக்கப்பட்டது.

உலகம் தோன்றிய காலம் தொட்டே காதலும் தோன்றிவிட்டது. உலகின் முதல் பெண்ணுக்கும் ஆணுக்கும் இனவிருத்திக்காகத் தோன்றிய விருப்பம் நாளடைவில் காதலாக வடிவெடுத்திருக்கலாம். ஆதியில் காதல் என்பதே கிடையாது. தாய்வழிச் சமூகத்தில் பெண் தலைமை தாங்கினாள். அன்றைய இரவை யாருடன் கழிப்பது என்கிற முடிவை அவளே எடுத்தாள். வேட்டையிலோ போரிலோ வென்ற ஆணை மட்டுமே அவள் தேர்ந்தெடுத்தாள். ஏனெனில் அப்போதுதான் வலிமையான வாரிசு பிறக்கும் என்பதால். அதனால் ஆணுக்குப் பெண்ணை அடையத் தன் வலிமையை அவளுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் பின்னர் தலைமைப் பொறுப்பு ஆணின் கைக்குச் சென்றபின் திருமணம், குடும்பம், சமுதாயம் என்று பெண்ணின் கழுத்தில் தாலி கட்டி அவளைத் தன் உடைமையாக அறிவித்தான். அதனால்தான் அன்றைய ராஜ்ஜியங்களுக்கு இடையிலான போர்களில் இதர பொருட்களைப் போலவே பெண்களையும் வெறும் பொருளாகக் கருதிக் கவர்ந்து சென்றார்கள். பெண்கள் பொருட்டு யுத்தங்களும் மூண்டன.

இன்னாருக்கு இன்னார் மீது இத்தனை மணிக்குக் காதல் பிறக்கும் என்று வரையறுக்க முடியாது. ஆனால், இயற்கையின் மாயவிசையில் இருவருக்கு இடையில் அன்பு ஊற்றெடுப்பதின் மர்மம் மட்டும் இன்னும் விளங்கவில்லை. அந்த இருவர் பெண்ணும் ஆணுமாகத்தான் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் கிடையாது. டுபுடீவுஞுஐயூ ஆகவும் இருக்கலாம் என்கிற புரிதல் இப்போதுதான் மெல்ல ஆரம்பித்திருக்கிறது.

ரோமானிய அரசன் இரண்டாம் கிளாடியுஸ் மிமி ரோமாபுரி நாட்டில் இனி யாரும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்றும், இதுவரை நடந்த திருமணங்களை எல்லாம் ரத்து செய்வதாகவும் அதிரடி அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார். ஏனென்றால் ஆண்கள் திருமணம் செய்துகொண்டால் அவர்களது வீரம் குறைந்து விடுமென்ற எண்ணத்தினால் இத்தகைய கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார். எனவே திருமணத்துக்கு தடை விதித்திருக்கிறார். இதனால் நாட்டிலுள்ள அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். இத்தகைய சூழலில் திருமணம் செய்துகொள்ள விருப்பம் கொண்ட ஆண்களுக்கு வேலண்டைன் என்கிற பாதிரியார் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து வைத்தார். இதை அறிந்த மன்னன் அவரைக் கைது செய்து தூக்கிலிட உத்தரவு பிறப்பித்தார். சிறையில் இருக்கும் போது சிறைக் காவலரின் பார்வையிழந்த மகள் அஸ்டோரியஸ் மீது காதல் கொண்டார் வேலண்டைன். அவள் அவரைச் சிறையிலிருந்து விடுவிக்க முயற்சி செய்தாள். இவ்விஷயம் அவளது தந்தைக்குத் தெரியவே, அவளை வீட்டுச் சிறையில் வைத்தார். அந்தக் காதல் நிறைவேறவில்லை. வேலண்டைனின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நாள் கி.பி.270 பெப்ரவரி 14.

காதலுக்கு என்று ஒரு குறிப்பிட்ட தினத்தைக் கொண்டாடுவது மேல்நாட்டினரிடமிருந்து



ஒட்டிக் கொண்ட வழக்கம் என்றுதான் நாம் இதுவரை நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நம் சங்க காலத்திலேயே காதலர் தினம் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது என்பது வியப்புக்குரிய விஷயம். வேலண்டைன் காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகள் முன்பே காதலர் தினத்தைக் கொண்டாடியவர்கள் நாம்.

காதல்என்பது தன்னலம்கருதாது. தன் இணைக்காகவே உருகும். என்றாலும் காதல் என்கிற ஒன்றுதான் இன்றும் உலகத்தை இயங்க வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. பண்டைய தமிழருக்கு வீரமும், காதலும் இரு கண்களாக இருந்தன. மாசி மாத சித்திரை நட்சத்திரம் தொடக்கத்தில் இருந்து பங்குனி மாத சித்திரை நட்சத்திரம் வரையிலான இருபத்தெட்டு நாட்கள் அந்தக் காதல் பெருவிழாவை அரசர் முதல் சாமானியர் வரை எல்லாருமே கொண்டாடி மகிழ்ந்தனர். இலக்கியங்களில் இந்திர விழா காவிரி பூம்பட்டினத்தில் நடந்ததாகக் குறிப்பிடுகின்றனர். சிம்மனூர் செப்பேட்டில் மதுரையிலும் இந்திர விழா கொண்டாடியதாக ஒரு குறிப்பு இருந்திருக்கிறது. அன்று இந்த விழா பின் பனிக் காலமான மாசி மாதத்தில் கொண்டாடப்பட்டு இருக்கிறது. இன்றும் நாம் பின்பனிக் காலமான பிப்ரவரியில்தான் காதலர் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

பின்பனிக் காலத்தை ஏன் தமிழர் தேர்ந்தெடுத்தனர் என்றால், மழைக்காலம் முடிவுற்று முன்பனியான கடும்பனியில் வாடியிருந்த செடிகொடிகள் துளிர்த்து, வசந்தத்தின் வாயிலில் நுழையும் காலமாதலால் இயற்கையிலேயே உடலிலும் உள்ளத்திலும் உற்சாகம் ஊற்றெடுக்கும் என்பதால் இந்தக் காலத்தைத் தமிழர்கள் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள் போலும். மேலும் பூக்கள் அரும்பி மலர்ந்து கண்ணுக்கு விருந்தளிக்கும் காலமும் இஃதே.

“கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்து பனியரசு யாண்டுளன்..”
(சிலம்பு: 14: 110-112

கொண்டற்காற்று பாண்டியனின் கூடல் நகரிலே புகுந்து நெடுவேளான மன்மதனின் வில் விழாவைக் காணும் பின்பனிக் காலமாகிய பனியரசன் எங்குள்ளான் எனக் கேட்டது என்று கூறும் இளங்கோவடிகள் மதுரை நகரில் நடந்த காதல் விழா ஆகிய வில்விழாவைச் சொல்கிறார். இவ்விழா காமன் விழாவும் ஆனதால் இது பங்குனி முயக்கம் என்று அழைக்கப்பட்டது. முயக்கம் என்றால் காணுதல் என்றும் தொடர்ந்து காணுதல் என்றும் இருவிதமான பொருள் இருக்கிறது.

அகநானூறும்

“வருபுனல் நெரிதரும் இகுகரை பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்..”
(அகம் : 137: 8-9)

எனப் பேரியாற்றங்கரையில் நடந்த காதல் விழாவைப் பங்குனி முயக்கமாகக் காட்டுகிறது.

இதனைச் சோழ நாட்டினர் பங்குனி விழாவாகவும், சேர நாட்டினர் உள்ளி விழாவாகவும் கொண்டாடினர் என்பதை,

“கழுமலர் தந்த நல்தேர்ச் செம்பியன்
பங்குனி விழாவின் உறந்தையொடு
உள்ளி விழாவின் வஞ்சியும் சிறிதே..”

என்கிற நற்றிணைப் பாடல் விளக்குகிறது.

உறையூர்ப் பங்குனி விழா ஊர்கொண்ட பெருவிழாவாக நடந்தது என்று இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. உள்ளி என்பது நினைத்தல், விழைதல், தேடல் என்கிற பொருள்களில் வருவதால் காதலரைத் தேடும் விழா உள்ளிவிழா என்று அழைக்கப்பட்டிருக்கும்.

வில்லவன் விழா, வேனில் விழா, உள்ளி விழா, இந்திர விழா, பங்குனி விழா போன்ற விழாக்களில் காதல் கடவுளைப் போற்றியும் காதலை உயர்வாகச் சிறப்பித்தும் தமிழர்கள் பெரிதும் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றனர். பின் படிக்க காலம் எனப்படும் இளவேனிற் காலம் காதல் கடவுளுக்குரிய காலமாகக் கருதப்படுகிறது. கரும்பு வில்லையும், ஐந்து வகை மலர்களால் ஆன அம்பையும் கொண்டுள்ள காமக் கடவுளுக்கான வில்லவன் விழாவாகவும் இது கொண்டாடப்பட்டது.

சோழ அரசனான தூங்கெயில் எறிந்த நெடுங்கோட் செம்பியன் என்பவன் பொதிகை மலையில் தங்கியிருந்த அகத்தியரின் ஆலோசனைப்படி காமன் விழாவை அரசவிழாவாக நடத்தத் தொடங்கினான். இவ்விழாவை மாசித் திங்களில் கால்கோள் இட்டு பங்குனித் திங்கள் சித்திரை நட்சத்திரம் வரை இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடினான் என மணிமேகலை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காதலர் தினப் பெருவிழாவை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்று செம்பியன் கூறியுள்ளதைப் பார்ப்போமா? காதலர்கள் கூடிக் களிக்கும் இடங்களில் பந்தலிட்டுக் குளிர்ச்சியான ஆற்று மணலைப் பரப்ப வேண்டுமாம். விழா அரங்கங்களில் நல்ல அழகான இன்பம் பொங்கும் விதத்தில் உரையாளர்களைப் பேசச் சொல்ல வேண்டுமாம். பேச்சுத்திறன் உடையவர்கள் சமயத் தத்துவங்களைக் காதலர்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமாம். வாதங்களை மென்மையாக வாதிட்டே தீர்த்து வைக்க வேண்டுமாம். பகைவரைக் கண்டால் அந்த இடத்தை விட்டு நகர்ந்து போய்விட வேண்டுமாம். மென்மையான மணல் குன்றுகளிலும், மலர் நிரம்பிய சோலைகளிலும், குளிர்ச்சியான ஆற்றங்கரையிலும், மரங்கள் தாழப் படர்ந்து நிழல் கொடுக்கும் நீர்த் துறைகளிலும் கூடிக் களிக்கும் மக்கள் ஒற்றுமையாக இருக்கத் தேவையான காவல் ஏற்பாடுகளைச் செவ்வனே செய்ய வேண்டுமாம். நம் மக்கள் எப்படிக் காதலர் மாதத்தைக் கொண்டாடி இருக்கிறார்கள் என்று பார்த்தீர்களா?.

சோழர் காலத்தில் யவனர் என்கிற பெயரில் ரோமானியர்கள் தமிழகத்தோடு வணிகத் தொடர்பு



(7ஆம் பக்கம் பார்க்க...)



# தவறாக வழிநடத்தப்படுகிறார் புடின் அமெரிக்க அதிபர் டிரம்ப்

'நேட்டோ' எனப்படும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த, 30 நாடுகள் இடம்பெற்றுள்ளன. ராணுவ ஒத்துழைப்புக்கான இந்த அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கலந்து கொண்ட அமெரிக்க அதிபர் டிரம்ப், ரஷ்யாவை பகிரங்கமாக தாக்கி பேசினார்.

அவர் பேசியதாவது உக்ரைன் மீதான போருக்குப் பிறகு, பிற நாடுகளையும் ஆக்கிரமிக்க ரஷ்ய அதிபர் புடின் நினைப்பது போல் தெரிகிறது. 'நேட்டோ' அமைப்பின் மிகப்பெரிய நீண்டகால அச்சுறுத்தல்களில் ஒன்றாக ரஷ்யா இருக்கிறது.

உக்ரைனுக்கு கூடுதல் ஆயுத உதவிகளை வழங்குவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும். புடின் தவறாக வழிநடத்தப்படுகிறார் என உணர்கிறேன். உக்ரைனுடனான போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்ய அதிபர் புடின் முன் வர வேண்டும். இந்தப் போரை நிறுத்த இது சரியான நேரம். நான் புடினுடன் பேசி முடிவு காண்பேன். இது எதிர்பார்த்ததை விட சிக்கலானதாக உள்ளது, எனக் கூறினார். (ஐ)

# மெக்சிகோவில் சாலை கொண்டாட்டத்தில் துப்பாக்கிச்சூடு 12 பேர் உயிரிழப்பு 20 பேர் காயம்



மெக்சிகோவின் குவானாஜுவாடோ மாகாணத்தில் நடந்த சாலை கொண்டாட்டத்தில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

மெக்சிகோவின் குவானாஜுவாடோ மாகாணத்தில் இரபுவாடோ நகரில் புனித யோவானுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பிரமாண்ட நிகழ்ச்சி நடந்தது. இந்த கொண்டாட்டத்தில் பங்கேற்ற உள்ளூர்வாசிகள் நடனமாடியும், மது அருந்தியும் கொண்டிருந்தனர்.

அப்போது மர்மநபர்கள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் பலத்த காயம் அடைந்தனர். தாக்குதல் நடத்திய நபர்களை அடையாளம் காணும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. குற்றவாளிகளை கண்டுபிடிப்போம். அவர்களை நீதியின் முன் நிறுத்துவோம் என்று போலீசார் தெரிவித்தனர்.

மெக்சிகோ அதிபர் கிளாடியா ஷீன்பாம் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தார். அவர், "இந்த சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. விசாரணை நடந்து வருகிறது" என்றார்.

மெக்சிகோ நகரத்தின் வடமேற்கே அமைந்துள்ள குவானாஜ/வாடோ, பல ஆண்டுகளாக மெக்சிகோவின் மிகவும் வன்முறை நிறைந்த மாநிலங்களில் ஒன்றாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வானில் பறக்கும் போது திடீரென கிளம்பிய புகை அவசர அவசரமாக தரையிறங்கிய அமெரிக்க விமானம்



வானில் பறக்கும் போது திடீரென புகை கிளம்பிய நிலையில், லாஸ் வெகாஸ் விமான நிலையத்தில் அமெரிக்க பயணிகள் விமானம் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க நாடுகளில் ஒன்றான நெவாடாவில் உள்ள லாஸ் வெகாஸ் விமான நிலையத்தில் இருந்து வட கரோலினா மாகாணத்தில் உள்ள சார்லட் டக்ளஸ் சர்வதேச விமான நிலையத்திற்கு, 153 பயணிகள் மற்றும் 6 பணியாளர்களுடன் அமெரிக்கன் ஏர்லைன் விமானம் புறப்பட்டது. வானிலை பறக்கத் தொடங்கிய சிறிது நிமிடங்களிலேயே இன்ஜினில் கோளாறு ஏற்பட்டு, புகை வெளியேறியது.

இதனை உணர்ந்த விமானி, சாமர்த்தியமாக செயல்பட்டு, விமானத்தை மீண்டும் லாஸ் வெகாஸ் விமான நிலையத்திலேயே தரையிறக்கினார். இதனால், பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். பிறகு, அவர்கள் விமானத்தில் இருந்து பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

இது குறித்து அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'விமானத்தில் கோளாறு ஏற்பட்ட போதிலும் பயணிகளை பத்திரமாக அழைத்து வந்த எங்கள் விமானக் குழுவினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். பயணிகளின் திட்டமிட்ட பயணத்தை விரைந்து செயல்படுத்துவோம்,' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, விமானம் வானில் பறக்க தொடங்கும் போது புகை வெளியேறிய வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது. (ஐ)



# நீண்ட தூர அணு ஆயுத ஏவுகணை தயாரிப்பு முயற்சியில் பாகிஸ்தான்

நம் அண்டை நாடான பாகிஸ்தான் மீது, 'ஆப்பரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் மத்திய அரசு சமீபத்தில் நடவடிக்கையை எடுத்தது. இதைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதல், நான்கு நாட்களில் முடிவுக்கு வந்தது.

அதன்படி, சீனாவின் உதவியுடன் பாகிஸ்தான் தன் அணு ஆயுதங்களை மேம்படுத்த முயற்சித்து வருகிறது.

அந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை தயாரிப்பை விரைவுபடுத்தியுள்ளதாக அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த ஏவுகணை தயாரானால் பாகிஸ்தானை அணு ஆயுத எதிரியாக அமெரிக்கா கருதும். ஏனென்றால் இந்த ஏவுகணை 5,000 கி.மீ., தூரம் வரை சென்று தாக்கும் சக்தி கொண்டது. (ஐ)



# அணு ஆயுத திட்டத்தை ஈரான் மீண்டும் துவக்கினால் தாக்குவோம்: அதிபர் டிரம்ப்

'அணு ஆயுத திட்டத்தை மீண்டும் துவக்கினால் ஈரானை தாக்குவோம். அந்த தாக்குதல் தற்போது நடந்ததைவிட மோசமானதாக இருக்கும்,' என, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நேற்று கூறினார்.

மேற்காசிய நாடுகளான இஸ்ரேல் – ஈரான் இடையேயான போரில் ஈரானின் அணுசக்தி நிலையங்களை அமெரிக்க விமானப்படைகள் குண்டு வீசி அழித்தன. அதன்பின், இரு நாடுகளுக்கும் இடையே போர் நிறுத்தத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார். இந்நிலையில், ஐரோப்பிய நாடான நெதர்லாந்தின் த ஹேக்கில் நடக்கும், 'நேட்டோ' எனப்படும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் மாநாட்டில் அதிபர் டிரம்ப் பங்கேற்றார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் எல்லாம் முழுதுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு அங்கிருந்து எதையும் எடுக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. அந்தளவுக்கு அமெரிக்க படைகள் வேகமாக செயல்பட்டன. ஈரானின் அணு ஆயுதத் திட்டம் முடிந்துவிட்டது. அவர்கள் அதை மீண்டும் உருவாக்க முயற்சித்தால், நாங்கள் மீண்டும் தாக்குவோம், அது இன்னும் மோசமாக இருக்கும். வெறுமனே போர் நிறுத்தம் வேண்டாம் உண்மையான முடிவு வேண்டும்.

அதற்கு ஈரான் அணு ஆயுதங்களை முற்றிலுமாக கைவிட வேண்டும். அடுத்த சில நாட்களில் இதைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக அமெரிக்க ராணுவ உளவு அமைப்பு நடத்திய முதற்கட்ட ஆய்வில், 'அமெரிக்காவின் தாக்குதல் குறைந்தபட்ச சேதத்தையே ஈரானின் அணு ஆயுதத் திட்டத்திற்கு ஏற்படுத்தியது. அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை தாக்குதலுக்கு முன் ஈரான் இடமாற்றியிருக்கலாம்' என, தெரியவந்துள்ளது.

இஸ்ரேலும் ஈரானும் பள்ளி வளாகத்தில் கட்டிப்புரண்டு அடித்துக்கொள்ளும் குழந்தைகள் போல சண்டையிட்டனர். அதனால் அவர்களை வழிக்குக் கொண்டுவர கடுமையாகப் பேச வேண்டியிருந்தது. அவ்வப்போது அப்படி பேச வேண்டும். (ஐ)

## சிறையிலுள்ள..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோமகன் தெரிவித்துள்ளார். குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் யாழ். ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை மேற்கொண்ட ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்த கோரிக்கை அடங்கிய மகஜர் ஐ.நா. சபையின் ஆணையாளருக்கு வழங்கியிருந்தோம். இதேநேரம் குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே இலங்கை அரசுக்கும் வலியுறுத்தியிருந்தோம்.

இந்த நிலையில் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த ஐ.நா. ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் காணப்படும் பல்வேறு இடங்களுக்கும் சென்று பிரச்சினைகள் மற்றும் சாட்சியங்களை நேரில் பார்வையிட்டிருந்தார். மக்களின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் பெற்றிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எமது அமைப்பினரால் கைதிகளின் விடுதலைக்கான வலுயுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது." - என்றார்

## சந்தேகத்துக்கிடமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர். இந்தச் சம்பவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் சிறைக்கூண்டினுள் இருந்து தூக்கிட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளால் மீட்கப்பட்டதையடுத்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த கைதியே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கெஹலியவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று வியாழக்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப்பத்திரிகையில் கெஹலியவின் குடும்பத்துக்கு எதிராக 43 குற்றச்சாட்டுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## கரைதுரைப்பற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் ஆட்சி அமைப்பதற்காக எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் வாக்கெடுப்பு மூலமாக தவிசாளர், உப தவிசாளர் தெரிவு இடம்பெறுவதற்காக இன்றைய தினம் நாள் குறிக்கப்பட்டிருந்தது.

இன்று காலை 8:30 மணிக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது பெரும்பாலான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைத் தேர்வு செய்திருந்தனர்.

தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது.

21 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்ட நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் 11 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் 4 வாக்குகளையும் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் 5 வாக்குகளையும் பெற்றனர்.

வாக்களிப்பின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா நடுநிலை வகித்தார்.

இதனடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

இதேவேளை, உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஷ்வரன் அனோஜன், சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர் வல்லிபுரம் வசந்தராசா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஸ்வரன் அனோஜன் 9 வாக்குகளையும், சுயேச்சைக் குழு உறுப்பினர் வல்லிபுரம் வசந்தராசா 6 வாக்குகளையும் பெற்றுக்கொள்ள ஆறு உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஸ்வரன் அனோஜன் உப தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

## துமிந்தவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 26

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த திஸா நாயக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுயள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கொழும்பு - பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து மே மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸாநாயக்க, சுகயீனம் காரணமாக மே மாதம் 25ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மே மாதம் 28ஆம் திகதி மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!

அநுராதபுரம், ஜூன் 26

அநுராதபுரம் - திரப்பனை, கல்குலம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நபர் மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், துப்பாக்கிச்சூட்டை நடத்தியது யார் என்பது இன்னும் கண்டறியப்படாத நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## சங்கானையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மது எமக்கு தேவைதானா?, அரசே புதிய மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்காதே, மது ஒழிப்பில் ஈடுபடும் ஜனாதிபதிக்கு கை கொடுப்போம், போதையெனும் சாக்கடையில் விழாதீர்கள்" எனும் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்துக்குச் சங்கானை பிரதேச செயலகத்தினர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினர், மானிப்பாய் பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸார், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர், அந்திரான் தோற்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் ஆதரவு வழங்கினர்.

## சுகாதார அமைச்சின் முன்னாள் செயலர் ஜனக சந்திரகுப்தவுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூன் 26

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று மாலை உத்தரவிட்டுள்ளார்.

ஜனக ஸ்ரீ சந்திரகுப்த வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று காலை முன்னிலையாகியிருந்த போது கைது செய்யப்பட்டிருந்தார்.



## ஆதலினால் காதல் செய்வோம்!....

வைத்திருந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. அதன் பொருட்டு இக்காமன் விழா குறித்த செய்திகளால் கவரப்பட்ட ரோமானியர்கள் தாங்களும் கொண்டாட ஏற்படுத்திக் கொண்டதே இந்த நவீன காதலர் தினக் கொண்டாட்டம் என்று கருத நிறைய வாய்ப்பிருக்கிறது.

இத்தகைய காதல் பெருவிழா காலப் போக்கில் மறைந்து மீண்டும் தொண்ணூறுகளில் உயிர்ப்பித்தது. அன்றைய காதலர்களுக்கு வாழ்த்து அட்டைகள், இதய வடிவ கீ-செயின்கள் போன்றவை அன்பைப் பரிமாறிக்கொள்ள உதவிய பரிசுப் பொருட்கள். தகவல் தொடர்பு கடினமாக இருந்த அக்காலத்தில் இந்தப் பொருட்கள் அவர்கள் காதலை வற்றாமல் இருக்கச் செய்தன. எண்ணற்ற நாவல்கள், திரைப் படங்கள், பாடல்கள் போன்றவை காதலைப் போற்றின. மில்லேனியத்தின் துவக்கத்தில் கணினி வருகைக்குப் பின் இந்த வாழ்த்து அட்டைகள் மெல்ல மறையத் தொடங்கி இப்போது வழக்கொழிந்தே போயின. நினைத்தால் பேசிக்கொள்ளும், பார்த்துக்கொள்ளும் டிஜிட்டல் யுகத்தில் காதலிக்கோ/காதலனுக்கோ காத்துக் கொண்டிருக்கும் நேரம் மிச்சமாகத் தொடங்கியது. இதனால் கனவின் மாயா லோகத்தில் இருந்து விடுபட்டு மிச்ச வேலைகளைப் பார்க்கும் பொறுப்பும் இளைய தலைமுறைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. காதலுக்காக உருகாமல் யதார்த்தத்தைப் புரிந்துகொள்வோர் பெருகி வருகிறார்கள்.

அதே நேரத்தில் இன்னும் அதிகமாக காதலுக்குள் சாதி, மதங்களின் கிளைகள் ஊடுருவியிருக்கின்றன. அவை தங்கள் கோரப் பற்களை மறைத்துக்கொண்டு மர்மப் புன்னகை புரிகின்றன. காதலைக் கொண்டாடும் இந்த மண்ணில்தான் மகளோ/மகனோ வேறு சாதியில்/மதத்தில் காதலிக்கிறார்கள் என்று தெரிந்ததும் கையில் அரிவாளை எடுக்கிறார்கள். அல்லது, "இந்தக் குடும்ப கௌரவத்தையும்.. அப்பாவோட மானத்தையும் காப்பாத்தணும்னா நீயே தூக்குக் கயித்தை மாட்டிக்கம்மா" என்று நீலிக்கண்ணீர் விட்டுக் காதலைத் தொங்க விடுகிறார்கள். பள்ளிப் பருவத்தில் முகிழ்க்கும் அறியாக்காதல் முதல் திருமணம் தாண்டிய காதல் வரை எத்தனையோ காதல்களையும், காதலர்களையும் இந்த உலகம் கண்டிருக்கிறது. "ஒரு செடியில் ஒருமுறைதான் பூப்பூக்கும்.." போன்ற அசட்டுத் தனங்கள் மறைந்து, "ஒரு டாக்டர் பொண்ணு நோ சொன்னா.. நர்ஸ்/ பொண்ணைக் காதலி.." என்றும், "த்ரிஷா இல்லனா திவ்யா.." என்றும் காதலும் "ஒரே காதல் ஊரில் இல்லையடா.." என்று அப்டேட்டாகிப் போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால், திடீரென்று முளைக்கும் இந்தக் கலாச்சாரக் காவலர்கள்தாம் காதலர் தினத்தன்று கண்ணில் படுவோரைப் பிடித்து ஒரு மஞ்சள் கயிற்றைக் கொடுத்து கட்டச் சொல்லி வற்புறுத்தி கேவலப்படுத்துகிறார்கள்.

காதலர்கள் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால், உண்மையான காதல் மீது எந்த விமர்சனமும் இல்லை. உண்மையான நேசம் என்பது இணையரை அவரது குறைகளுடனும் ஏற்றுக் கொள்வதே. நமக்குப் பிடித்த மாதிரி இணையரை மாற்ற முயலாமல், அவருக்குப் பிடித்த மாதிரி நம் சுயம் தொலைத்து நாமும் மாறிவிடாமல், அவரவர் நிறை, குறைகளை அடுத்தவர் புரிந்து கொண்டு, பிரிந்தே இருக்கும் இரு தண்டவாளங்கள் போல சேர்ந்தே பயணிப்பதுதான் உண்மையான காதல். அத்தகைய காதல் வாய்த்துவிட்டால் வாழ்க்கையில் எப்பேர்ப்பட்ட சோதனைகள் வந்தாலும் அந்தக் காதலின் மெல்லிய இழை எல்லாவற்றையும் தகர்த்து எறிந்துவிடும். பிப்ரவரி மாதத்துப் பின்பனிக் காலம் மட்டுமல்லாது எல்லாப் பருவகாலங்களிலும் திகட்டத் திகட்டக் காதலிப்போம். அன்பைப் பகிர்வோம். இளமையில் வருவது மட்டுமல்ல காதல். உடல் மீதான ஈர்ப்பு குறைந்த பின்னும் பொங்கிப் பெருகுவதே காதல்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2025 வெளியிடப்பெற்றது.